

# நான் ஏன் பிறந்தேன்?

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் என்றோ ஒரு நாள் கேட்கப் போகின்ற கேள்வி இது. இதுவரை நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிராவிட்டால், இதைக் கடவுள் காட்டும் வழியாக நினைத்து ஏன் இதைக்குறித்து சிந்தித்துப் பார்க்கக்கூடாது? நம் ஒவ்வொருவரது பிறப்பிற்கும் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். சிலர் இதை விதியின் செயல் என்று கூறுவார்கள். சமய நம்பிக்கை கொண்ட வேறு சிலர் இதைக் கர்மவினை என்று கூறவார்கள். பெரும்பாலானோர் இதனைப்பிறவிக்கடலின் ஒரு துளியாகக் கருதுகிறார்கள். ஆனால், இதில் எது உண்மை? யாரோ சொன்னார் என்று வாய் வழி வந்த சில கொள்கைகளை நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர உண்மையில் அவற்றை நாம் மனப்பூர்வமாக நம்புவதில்லை.

ஆனால், நான் ஏன் பிறந்தேன்? என்று அறிந்து கொள்வது அவசியமல்லவா? இதை வாசிக்கும்போதே, சிலர் ஏன் இந்த வீண்முயற்சி? என்று எண்ணலாம். முடியக்கூடிய காரியமா இது? என்றுகூட முகம் சுழிக்கலாம். தொடர்ந்து இதை நீங்கள் வாசிப்பீர்களானால் நிச்சயம் உங்கள் பிறப்பைப் பற்றிய கேள்விகளுக்குத் தகுந்த பதில் கிடைக்கும்.

நான் ஏன் பிறந்தேன்? என்ற வினாவிற்கு விடையளிக்கக்கூடியவர் நம்மைப்படைத்த கடவுள் ஒருவர்தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ஆனால், அவர், நம் பிறப்பின் இரகசியத்தை எங்காவது வெளிப்படுத்தியுள்ளாரா? என்பதில்தான் பலரும் நிச்சயமற்றிருக்கிறார்கள். நம் பிறப்பின் இரகசியத்தைக் கடவுள் மனிதன் அறிந்து கொள்ளும்படி வெளிப்படுத்தியுள்ளார். கடவுளின் வார்த்தையாகிய வேதம்தான் அதைப்பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. வேதம் கடவுளின் சத்திய வசனம். அது கடவுளின் நாவிலிருந்து வெளிவந்த வார்த்தை. அது நம் பிறப்பைப் பற்றிக் கூறும்போது, நாமனைவருமே கடவுளால் அவருடைய மகிமைக்காகப் படைக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறுகின்றது. அதாவது, கடவுள், நாம் எப்படி வாழ வேண்டும் என்று எதிர் பார்க்கிறாரோ, அம்முறையில் வாழ்வதே அவரை மகிமைப்படுத்தும் செயலாகும். இதைச்செய்வதற்கு நாமனைவரும் “சாமியார்களாக” மாறிவிட வேண்டிய அவசிய மில்லை. கடவுளை அறிந்து கொண்டு, அவருடைய விருப்பப்படி, இவ்வுலகில் எல்லாக் காரியங்களையும் செய்வதே, நமது பிறப்பின் நோக்கமாகவும், கடவுளுக்கு மகிமை தரும் செயலாகவும் இருக்கின்றது.

இன்று மனிதர்கள் தம்மை உருவாக்கியவரையும், தாம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும் அறியாது, வழி தெரியாது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தும் வேதம், ஆதியிலே கடவுள் உருவாக்கிய முதல் மனிதன் கடவுளுக்கு எதிராக செயல்பட்டதால், அவனையும், அவனது பின் தோன்றல்களையும் பாவம் சூழ்ந்து கொண்டுள்ளது என்று தெரிவிக்கின்றது. இப்பாவத்தின் கொடும்பிடிக்குள் சிக்கியிருப்பதால்தான் மனிதனால் கடவுளையும், அவரது வழிகளையும் இன்று அறிந்து கொள்ள முடியவில்லை. அகக்கண்கள் குருடாகி, பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் மனிதன், கடவுள் யாரென்று தெரியாமல் கல்லையும், புல்லையும், மரத்தையும், மிருகங்களையும் கடவுளாக எண்ணி வழிபட்டு தன்னைப் படைத்தவரை மேலும் உதாசீனப்படுத்திக் கொண்டிருக்கிறான். பாவத்தின் கோரத்தால் தேவ கோபத்தை சுமந்து, இருதயத்தில் சமாதானம் இல்லாமல், அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கிறான்.

**"... அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினால் வீணானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்."**
***(ரோமர் 1:21-23)***

இதிலிருந்து விடுதலை பெற்று மனிதன் எப்படி கடவுளை மீண்டும் அறிந்து கொள்ள முடியும்? தான் பிறந்த நோக்கத்தை அவனால் எவ்வாறு நிறைவேற்ற முடியும்? மனிதன் தனக்கெதிராக எழுந்து, தன்னை நிராகரித்ததற்காக, கடவுள் அவனை அடியோடு அழித்துவிட முற்படவில்லை. நீதியுள்ள கடவுள் மனிதனுடைய செயலுக்காக, அவன் மீது கோபம் கொண்டிருந்தாலும், மீண்டும் அவன் தன்னை வழிபட்டு வாழும் வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதை சிலுவையின் வழி என்று வேதம் அழைக்கிறது. மனிதன் பாவத்தின் கொடுமையில் இருந்து விடுதலை பெற கல்வாரி சிலுவையில் தேவகுமாரனாகிய இயேசு தன்னையே உயிர்ப்பலி கொடுக்க வேண்டுமென்பது கடவுளின் திட்டம். அத்திட்டப்படி மனிதனுடைய பாவங்களையெல்லாம் தன்மேல் தாங்கி, சிலுவையில் தன்னைப் பலியாகக் கொடுத்த இயேசுவே இந்தச்சிலுவை வழியின் நாயகனாக இருக்கிறார்.



"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." (அப்போஸ்தலர் 4:12) என்று வேதம் கூறுகின்றது. ஆகவே, மனந்திரும்பி, தன் பாவங்களையெல்லாம் ஒப்புக் கொண்டு, அவற்றிற்காக மன்னிப்புக்கேட்டு, இயேசு கிறிஸ்துவை மட்டுமே விசுவாசித்து ஆண்டவராக ஏற்றுக் கொள்ளுவதன் மூலமே மனிதன் இன்று கடவுளைத் தன் வாழ்வில் மகிமைப்படுத்த முடியும். அவனால் தன் பிறப்பின் இரகசியத்தையும் அறிந்து கொள்ள முடியும்; தான் பிறந்த நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

நான் ஏன் பிறந்தேன்? என்று அறியாது இனியும் ஒருவரும் வாழ வேண்டிய அவசியமில்லை. வேத வசனங்கள் மனிதனுக்கு ஆன்மீக உயிரளிக்கும் வல்லமை கொண்டுள்ளன. அவ்வசனங்களைக் காது கொடுத்துக் கேட்பதாலும், வாசிப்பதாலும், கடவுளுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்துவின் மேல் நமக்கு விசுவாசம் ஏற்படுகின்றது. அவ்வசனங்களை இன்றே நீங்கள் நம்பிப் பற்றிக் கொள்ளுங்கள். வார்த்தை தவறாத கடவுளின் வழி முறைகளை ஏற்றுக் கொண்டு பாவத்தில் இருந்து இன்றே நீங்கள் மனந்திரும்புங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் உங்களை முழுமனதோடு ஒப்புக் கொடுங்கள். கடவுளின் வழிப்படி வாழ்ந்து அவரை உங்கள் வாழ்நாளெல்லாம் மகிமைப்படுத்துங்கள்.



**சத்திய வசனம்**